**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>SESSIONS CASE NO. 76 /2015</u>**

**<u>Deposition of Witness for : PW 1</u>**

| | |
|---|---|
| **Name** | **:** திருமதி.  மீனாட்சி |
| **Father Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of   31-03-2022.**

**<u>முதல் விசாரணை</u> -**

நான் தற்போது நீப்பத்துரை கிராமத்தில் வசித்து வருகிறேன்.  இறந்து போன சக்திவேல் என் கணவர்.  ஆஜர் எதிரியை தெரியும்.  அவர் தான் என் கணவரை கொலை செய்தவர்.  என் கணவர் கார்த்திகேயன் பஸ்சில் பஸ் டிரைவராக வேலை செய்து வந்தார். வேலையில்லாத நாட்களில் நீப்பத்துரை வெங்கட்ராமன் கோயிலில் என் மாமியார் பானுமதி பூஜை சாமான்கள் கடை வைத்து இருந்ததில் அவர் அந்த கடையை பார்த்து வருவார்.  அந்த கோயிலுக்கு கடை வாடகைக்கு சுங்க வசூல் செய்யும் உரிமையை ஏழுமலை என்பவர் குத்தகைக்கு எடுத்து இருந்தார்.  ஆஜர் எதிரி என் கணவரிடம் வந்து அசிங்கமான வார்த்தைகளால் பேசி நீ எப்படி வசூல் செய்யலாம் என்று கேட்டார்.  அவ்வாறு நான் வசூல் செய்யவில்லை என்று என் கணவர் கூறினார்.  2013 8வது மாதத்தில் என் கணவர் கடை அருகே படுத்துக் கொண்டிருந்த போது ஆஜர் எதிரி என் கணவர் மீது கல்லை எடுத்து போட்டார்.  என் கணவர் அவனை பார்த்து துரத்தவே அவன் ஓடிவிட்டான்.  மீண்டும் என் கணவர் அங்கேயே படுத்துக் கொண்டிருந்தார்.  இரவு 10 மணிக்கு மேல் 2 செங்கலை எடுத்து வந்து இத்தோடு செத்து ஒழிந்து போடா என்று சொல்லி என் கணவரின் உயிர்நிலையில் கல்லை போட்டார்.  மறுநாள் காலை என் கணவர் என்னிடம் வந்து சிறுநீருடன் ரத்தம் வருவதாக கூறினார்.  என் கணவரை அரூர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.  மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்தார்கள்.  அப்போது என் கணவர் இறந்து விட்டார்.  போலீசாரும் அங்கு

வந்தார்கள். எதிரி அடித்ததால் தான் என் கணவர் இறந்து விட்டார். என் கணவர் மருத்துவமனையில் இருந்த போது அங்கு வந்த போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் நான் நடந்ததை கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- மீனாட்சி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**<u>SESSIONS CASE NO. 76 /2015</u>**
**<u>Deposition of Witness for : PW 2</u>**

**Name** : திருமதி. பானுமதி
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 31-03-2022.**

**<u>முதல் விசாரணை</u> -**

நான் தற்போது நீப்பத்துரை கிராமத்தில் வசித்து வருகிறேன். இறந்து போன சக்திவேல் என் மகன். அ.சா.1 என் மருமகள். ஆஜா் எதிரியை தெரியும். நீப்பத்துரை வெங்கட்ராமன் கோயிலில் நான் பூஜை சாமான், பொறி கடை வைத்து நடத்தி வருகிறேன். என் மகன் சக்திவேல் என்னுடன் கூடமாட இருந்து கடையை பார்த்துக் கொண்டு இருப்பார். ஏழுமலை என்பவா் அந்த கோயிலில் சுங்க குத்தகையை எடுத்து இருந்தார். ஏழுமலையுடன் ஆஜா் எதிரி வசூல் செய்து கொண்டு இருந்தார். 13.8.2018ந் தேதி ஆஜா் எதிரி என் மகனிடம் அசிங்கமாக பேசி கடையில் வசூல் செய்து சாப்பிட்டாயா என்று சண்டையிட்டார். அந்த மாதம் 30ந் தேதி இரவு என் மகன் கடை முன்னால் படுத்துக் கொண்டிருந்தான். ஆஜா் எதிரி என் மகன் கால் மீது சிறிய கல்லை எடுத்து போட்டான். உடனே என் மகன் ஆஜா் எதிரியை துரத்தி செல்லும் போது ஆஜா் எதிரி ஓடிவிட்டார். அதன் பின்னா் என் மகன் அதே இடத்தில் படுத்துக் கொண்டான். இரவு 10 மணிக்கு மேல் 2 செங்கலை எடுத்து வந்து இத்தோடு செத்து ஒழிந்து போடா தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி என் மகனின் உயிா்நிலையில் கல்லை போட்டார். அதன் பிறகு என் மகன் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து தீா்த்தமலை மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தார். என் மகனுக்கு சிறுநீரில் ரத்தம் வருவதாக கூறினார். ஆம்புலன்சில் அரூா் க்கு அழைத்து சென்றேன். மேல் சிகிச்சைக்காக தா்மபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு அவருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவா்கள் கூறினார்கள். மேல் செங்கம் போலீசார் மருத்துவமனை

வந்து என் மகன் வாய்மொழியாக புகார் கொடுக்க அவர்கள் எழுதிக் கொண்டார்கள். அந்த புகாரில் உள்ள கைரேகை என் மகனுடையது தான். என் முன்பு தான் என் மகன் புகார் வாக்குமூலம் கொடுத்தார். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1, என் மகனுக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். சிகிச்சை பலனளிக்காமல் என் மகன் இறந்து விட்டார். ஆஜர் எதிரிதான் என் மகன் இறப்பிற்கு காரணம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** - இல்லை.

ஒம்/- பானுமதி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.